முழுப் பதிப்புரிமையுடையது.

SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2025 சனவரி

## (101) நிதிக் கணக்கீடு

(Financial Accounting)

2024-02-08
காலை
[9.00 – 12.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

பக்கங்கள் : 10
வினாக்கள் : 06

(1) ***காலம் :*** *03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே விடையளித்தல்*** *வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் செவ்வை நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா 01

*இல. **1.1** இலிருந்து **1.10** வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** "உரிமமொன்று எதிர்பார்க்கத்தக்க எதிர்காலத்திற்காக தொடர்ந்தும் செயற்படும் என்ற அனுமானத்தின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன"

மேற்படி கூற்றில் விபரிக்கப்படும் கணக்கீட்டு எண்ணக்கரு :

(1) உரிம (அலகுசார்) எண்ணக்கரு.
(2) அட்டுறு எண்ணக்கரு.
(3) தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு.
(4) பொருண்மைசார் எண்ணக்கரு.

**1.2** வணிக உரிமமொன்றின் நாட்டதாரரை (stakeholder)/ நாட்டதாரர்களை (stakeholders) கீழ்வருவன வற்றிலிருந்து தெரிவு செய்க :

(1) ஊழியர்கள். (2) அரசாங்கம். (3) போட்டியாளர்கள். (4) மேற்கூறிய யாவும்.

**1.3** **ரோஸி டிரேடர்ஸ்** 2022 ஏப்ரல் 01 இல் ரூபா 6,000,000/- இற்கு மோட்டார் வாகனமொன்றைக் கொள்வனவு செய்தது. வணிகத்தின் கொள்கையானது, மோட்டார் வாகனங்களை ஆண்டிற்கு 25% இல் குறைந்து செல்லும் மீதி முறையைப் பயன்படுத்தி தேய்மானம் செய்வதாகும். 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மோட்டார் வாகனத்தின் தேய்மானக் கட்டணம் :

(1) ரூ. 1,500,000/-. (2) ரூ. 1,125,000/-. (3) ரூ. 1,434,375/-. (4) ரூ. 2,625,000/-

**1.4** 2025 சனவரி 01 இல், ஒரு தனியுடமை வியாபாரமான **ராமா டிரேடர்ஸ்** அலுவலகப் பாவனைக்காக கடனடிப்படையில் ரூபா 600,000/- பெறுமதியான அலுவலக உபகரணமொன்றைக் கொள்வனவு செய்தது. இந்தப் பரிவர்த்தனை தொடர்பாக கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படும் சரியான தாக்கம் :

(1) சொத்துகளில் (assets) அதிகரிப்பும் பரிப்புகளில் (liabilities) அதிகரிப்பும்.

(2) சொத்துகளில் அதிகரிப்பும் உரிமையாண்மையில் அதிகரிப்பும்.

(3) சொத்துகளில் அதிகரிப்பும் பரிப்புகளில் குறைவும்.

(4) சொத்துகள் மற்றும் பரிப்புகளில் எவ்வித மாற்றமும் இல்லை.

**1.5** **XYZ டிரேடர்ஸின்** 2025 சனவரி 31 இலான காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் வரவு மீதி ரூ. 375,000/- ஆகும். ஆனால், காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிக்கும் அந்தத் திகதியிலான வங்கிக் கூற்றில் காட்டப்பட்ட மீதிக்குமிடையில் வித்தியாசம் காணப்பட்டது.

ரூபா 25,000/- பெறுமதியான ஒரு காசோலை 2025 சனவரி 30 இல் வைப்புச் செய்யப்பட்ட போதிலும், அது 2025 சனவரி 31 வரையில் தேறியிருக்கவில்லை என்பது கண்டறியப்பட்டது. மேலும், ரூபா 54,000/- பெறுமதியான ஒரு காசோலை 2025 சனவரி 30 இல் வழங்கப்பட்டிருந்த போதிலும், அது 2025 சனவரி 31 வரை கொடுப்பனவுக்காகச் சமர்ப்பிக்கப்படவில்லை. சேமிப்புக் கணக்கிற்கான வட்டி வருமானம் ரூபா 2,000/- ஆனது வங்கியால் நேரடியாக செலவு வைக்கப்பட்ட போதிலும் அது தொடர்பில் காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

மேற்படி தகவல்களின் அடிப்படையில், 2025 சனவரி 31 இலான வங்கிக் கூற்றில் காட்டப்பட்ட மீதியானது:

(1) ரூ. 344,000/-. (2) ரூ. 406,000/-. (3) ரூ. 348,000/-. (4) ரூ. 402,000/-.

**1.6** கீழ்வரும் தகவல்கள் 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான, ஒரு தனியுடமை வியாபாரமான **சில்வா டிரேடர்ஸின்** ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | ரூபா |
|---|---|
| 2023 ஏப்ரல் 01 இல் மூலதனம் | 1,500,000 |
| 2024 மார்ச் 31 இல் பரிப்புக்கள் | 900,000 |
| ஆண்டின் காலப்பகுதியில் உள்ளிடப்பட்ட மேலதிக மூலதனம் | 500,000 |
| ஆண்டின் காலப்பகுதியிலான எடுப்பனவுகள் | 300,000 |
| 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் | 750,000 |

மேற்படி தகவல்களின் அடிப்படையில், 2024 மார்ச் 31 இலான **சில்வா டிரேடர்ஸின்** மொத்தச் சொத்துகள் :

(1) ரூ. 3,950,000/-. (2) ரூ. 3,150,000/-.

(3) ரூ. 2,450,000/-. (4) ரூ. 3,350,000/-.

**1.7** "தொக்குகள், கிரயம் அல்லது நிகர தேறத்தக்க பெறுமதி (NRV) ஆகியவற்றில் எது குறைந்ததோ அதில் மதிப்பிடப்படுகின்றன".

மேற்படி கூற்றுடன் தொடர்புடைய கணக்கீட்டு எண்ணக்கரு :

(1) தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு. (2) அட்டுறு எண்ணக்கரு.

(3) முன்னெச்சரிக்கை எண்ணக்கரு. (4) பொருத்தப்பாட்டு எண்ணக்கரு.

**1.8** **ரோஹித் ஸ்டோர்ஸ்** இன் மாதாந்த அலுவலக வாடகை ரூபா 50,000/- ஆனது 2024 டிசெம்பர் 31 இல் செலுத்தப்பட்டது. இந்த ஊடுசெயல் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் சரியான தாக்கத்தை கீழ்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க :

| | சொத்துகள் (ரூபா) | = | உரிமையாண்மை (மூலதனம்) (ரூபா) | + பரிப்புக்கள் (ரூபா) |
|---|---|---|---|---|
| (1) | + 50,000 | = | - | + 50,000 |
| (2) | - 50,000 | = | - 50,000 | - |
| (3) | - | = | + 50,000 | - 50,000 |
| (4) | + 50,000 | = | + 50,000 | - |

**1.9** கீழ்வரும் தகவல்கள் 2025 சனவரி மாதத்திற்கான **விவேக் டிரேடர்ஸின்** ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | ரூபா |
|---|---|
| 2025 சனவரி 01 இல் வியாபார வருமதிகள் (கடன்பட்டோர்) கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி | 500,000 |
| 2025 சனவரி மாதத்திற்கான விற்பனை நாட்குறிப்பேட்டு மொத்தம் | 3,033,000 |
| 2025 சனவரி மாதத்திற்கான உட்திரும்பல் நாட்குறிப்பேட்டு மொத்தம் | 250,000 |
| மாதத்தின்போது பதிவழிப்புச் செய்யப்பட்ட அறவிடமுடியாக் கடன் | 150,000 |
| மாதத்தின்போது கடன்பட்டோரிடமிருந்து கிடைத்த காசு | 2,745,000 |

மேற்படி தகவல்களின் அடிப்படையில், 2025 சனவரி 31 இலான வியாபார வருமதிகள் (கடன்பட்டோர்) கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி:

(1) ரூ. 1,005,000/-. (2) ரூ. 505,000/-. (3) ரூ. 388,000/-. (4) ரூ. 855,000/-.

**1.10** 2024 டிசெம்பர் 31 இல், **ZZ டிரேடர்ஸின்** வங்கிக் கூற்றில் ரூபா 22,000/- சாதகமான மீதி காணப்பட்ட அதே வேளை காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கானது ஒரு வரவு (சாதகமான) மீதி ரூபா 20,000/- ஐக் காட்டியது.

வித்தியாசத்திற்கான கீழ்வரும் காரணங்கள் கண்டறியப்பட்டன :

- டிசெம்பர் மாதத்திற்கான வங்கிக் கட்டணங்கள் ரூபா 1,500/- ஆனது காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.
- ரூபா 25,000/- ஆனது வாடிக்கையாளர் ஒருவரால் நேரடியாக வைப்புச் செய்யப்பட்டது எனினும் அது காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.
- மாதாந்த கடன் தவணைக்கட்டணம் ரூபா 32,000/- ஆனது வங்கியால் வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் அது காசேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

மேற்படி தகவல்களின் அடிப்படையில், 2024 டிசெம்பர் 31 இலான சீராக்கப்பட்ட காசேட்டு மீதியாக அமையக்கூடியது :

(1) ரூ. 31,500/-. (2) ரூ. 15,000/-. (3) ரூ. 37,000/-. (4) ரூ. 11,500/-.

*கீழே* **1.11** *தொடக்கம்* **1.15** *வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும்* ***சரியானதா*** *அல்லது* ***தவறானதா*** *எனக் குறிப்பிடுக. உமது விடையை (சரியானது / தவறானது) உரிய வினா இலக்கத்துடன் விடைப்புத்தகத்தில் குறிப்பிடுக.*

**1.11** ACCPAC என்பது ஒரு பொதுக் கணக்கீட்டு மென்பொருளுக்கான உதாரணம் ஆகும்.

**1.12** நிதி நிலைக் கூற்றானது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதி ஈறாக வணிக உரிமம் ஒன்றின் நிதிச் செயலாற்றுகையைக் காட்டுகிறது.

**1.13** வங்கிக் கூற்றில் காட்டப்படும் மீதியானது எப்போதும் சாதகமான மீதியாகவே இருக்கும்.

**1.14** பரிவர்த்தனைகளும் நிகழ்வுகளும் கணக்கீட்டுச் செயன்முறையின் கணக்கீட்டு வெளியீடுகள் ஆகும்.

**1.15** ஒருமைப்பாடு (Integrity) என்பது கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் ஒருவரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நெறிமுறைக் கோட்பாடாகும்.

**1.16** தொடக்கம் **1.20** *வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.*

**1.16** நிதிக் கணக்கீட்டிற்கும் முகாமைத்துவக் கணக்கீட்டிற்கும் இடையிலான இரண்டு (02) வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

**1.17** "வருமானம்" என்னும் பதத்தை பொருள் வரையறை செய்க.

**1.18** நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது அட்டுறு எண்ணக்கரு எவ்வாறு பிரயோகிக்கப்படுகிறது என்பதற்கான இரண்டு (02) உதாரணங்களைக் குறிப்பிடுக.

**1.19** "உரிம (அலகுசார்) எண்ணக்கரு" என்பதைச் சுருக்கமாக விபரிக்குக.

**1.20** **ABC டிரேடர்ஸின்** கீழ்வரும் ஒவ்வொரு ஊடுசெயலையும் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் தொடர்புடைய மூல ஆவணத்தை அடையாளங் காண்க :

(a) கடன் அடிப்படையில் அலுவலகப் பாவனைக்காக **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனி**யிடமிருந்து ரூபா 1,000,000/- இற்கு இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டது.

(b) ரூபா 150,000/- பெறுமதியான பொருள்கள் வாடிக்கையாளர் ஒருவருக்கு கடன் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டன. (02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## <u>பகுதி B</u>

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

(a) ஒரு தனியுடமை வியாபாரமான **ரெஹானி டிரேடர்ஸ்** ஒரு சில்லறைக் கடை ஆகும். இக்கடையின் கீழ்வரும் கொடுக்கல் வாங்கல்கள் 2025 சனவரி மாதத்துடன் தொடர்புடையவை ஆகும் :

(1) மீள் விற்பனைக்காக கடன் அடிப்படையில் ரூபா 960,000/- பெறுமதியான பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

(2) ரூபா 450,000/- கிரயமான பொருள்கள் ரூபா 600,000/- காசுக்கு விற்பனை செய்யப்பட்டன.

(3) மாதாந்த கடை வாடகை ரூபா 20,000/- செலுத்தப்பட்டது.

(4) வியாபாரக் கடன்கொடுத்தோருக்கு ரூபா 200,000/- செலுத்தப்பட்டது.

(5) 2025 சனவரி 25 இல் முதிர்வடைந்த நிலையான வைப்பிலிருந்து பெறப்பட்ட வட்டி ரூபா 16,000/- ஆகும்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

கீழ்வரும் கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கான மேற்படி ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலினதும் தாக்கத்தைக் **குறிப்பிடுக.**

*[தொக்கு + வியாபார வருமதிகள் + காசு = உரிமையாண்மை (மூலதனம்) + பரிப்புக்கள்]*

(05 புள்ளிகள்)

(b) ஒரு தனியுடமை வியாபாரமான **ராதா டிரேடர்ஸின்** 2024 மார்ச் மாதத்தில் கீழ்வரும் கடன் விற்பனை ஊடுசெயல்கள் இடம்பெற்றன :

| திகதி | விலைப் பட்டியல் இல. | வாடிக்கையாளர் பெயர் | விபரம் | அளவு | அலகொன்றின் விலை (ரூபா) | வியாபாரக் கழிவு |
|---|---|---|---|---|---|---|
| 05.03.2024 | 1256 | ABC லிமிட்டெட் | கொப்பிகள் (80 பக்கங்கள்) | 1,200 | 65/- | 5% |
| 10.03.2024 | 1257 | PQ டிரேடர்ஸ் | A4 தாள் பொதிகள் | 300 | 980/- | - |
| 16.03.2024 | 1258 | XYZ டிரேடர்ஸ் | CR கொப்பிகள் (120 பக்கங்கள்) | 200 | 240/- | 10% |

மேற்படி தகவல்களை அடிப்படையாகக் கொண்டு,

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2024 மார்ச் மாதத்திற்கான மேற்படி ஊடுசெயல்களைப் பதிவு செய்வதற்கு **ராதா டிரேடர்ஸின்** விற்பனை நாட்குறிப்பேட்டைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

**ஆன் வன்பொருளகம்** என்பது ஆரம்ப மூலதனமாக ரூ 4,500,000/- ஐ காசாக முதலீடு செய்து 2024 சனவரி 01 இல் **ஆன்** என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு தனியுடமை வியாபாரம் ஆகும்.

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் (காசேடு) பொழிப்பு கீழ்வருமாறு :

**காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு)**

| பெறுவனவுகள் | வரவு (ரூபா) | கொடுப்பனவுகள் | செலவு (ரூபா) |
|---|---|---|---|
| ஆரம்ப மூலதன முதலீடு | 4,500,000 | காசுக்கு கொள்வனவுகள் | 3,250,000 |
| காசுக்கு விற்பனை | 6,200,000 | வியாபாரக் கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவுகள் | 3,150,000 |
| வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்தான பெறுவனவுகள் | 2,500,000 | பயணம் மற்றும் போக்குவரத்துக் கட்டணங்கள் | 450,000 |
| | | சம்பளங்களும் கூலிகளும் | 900,000 |
| | | அச்சிடலும் காகிதாதிகளும் | 80,000 |
| | | லொறி ஒன்றின் கொள்வனவு (2024 அக்டோபர் 01 இல் கொள்வனவு செய்யப்பட்டது) | 2,000,000 |
| | | செலுத்திய அலுவலக வாடகை (மாதாந்த அலுவலக வாடகை ரூபா 60,000/-) | 900,000 |
| | | மின்சாரச் செலவினம் | 280,000 |
| | | காப்புறுதி | 120,000 |
| | | மீதி C/F | 2,070,000 |
| | **13,200,000** | | **13,200,000** |

(2) கீழ்வரும் மீதிகள் 2024 டிசெம்பர் 31 இல் கணக்கேடுகளில் காணப்பட்டன :

| | ரூபா |
|---|---|
| வியயாபாரக் கடன்பட்டோர் | 2,400,000 |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 2,100,000 |
| முற்கொடுப்பனவு – அலுவலக வாடகை | 180,000 |
| செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணம் | 25,000 |

(3) மோட்டார் வாகனங்கள் நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் ஆண்டிற்கு 20% இல் தேய்மானம் செய்யப்பட வேண்டும்.

(4) 2024 டிசெம்பர் 31 இல் எவ்வித தொக்குகளும் (inventories) இல்லை.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2024 டிசெம்பர் 31 இலான **ஆன் வன்பொருளகத்தின்** பரீட்சை மீதியைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 04

**செனேவி என்ஜினியரிங்** என்பது உருக்கிலான தளபாடங்களைத் தயாரிக்கின்ற ஒரு கம்பனி ஆகும். 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **செனேவி என்ஜினியரிங்** இன் ஏடுகளிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டன :

| விபரம் | ரூபா |
|---|---|
| மூலப்பொருள் கொள்வனவு | 4,750,000 |
| மூலப்பொருளின் உள்வந்த வண்டிக்கூலி | 75,000 |
| நேர் கூலிகள் | 2,200,000 |
| ஏனைய நேர் செலவினங்கள் | 210,000 |
| மின்சாரம் | 450,000 |
| தொழிற்சாலை முகாமையாளரின் சம்பளம் | 1,200,000 |
| பாதுகாப்புக் (security) கட்டணங்கள் | 550,000 |
| தொழிற்சாலை மீதான காப்புறுதி | 80,000 |
| வாடகை | 720,000 |
| தேய்மானம் - பொறி மற்றும் இயந்திரம் | 220,000 |
| தேய்மானம் - மோட்டார் லொறி | 240,000 |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன :

(1) தொக்குகள் கீழ்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளன :

| விபரம் | 2023 ஏப்ரல் 01 இல் (ரூபா) | 2024 மார்ச் 31 இல் (ரூபா) |
|---|---|---|
| மூலப்பொருள் இருப்பு (கிரயத்தில்) | - | 250,000 |
| புத்துருவாகும் வேலை (முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது) | 180,000 | 80,000 |

(2) மோட்டார் லொறியானது பூர்த்தி செய்யப்பட்ட உருக்குத் தளபாடங்களை வாடிக்கையாளர்களிடம் சேர்ப்பிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

(3) பின்வரும் செலவினங்கள் கீழ்வருமாறு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் :

| செலவினங்கள் | தொழிற்சாலை | அலுவலகம் |
|---|---|---|
| மின்சாரம் | 75% | 25% |
| வாடகை | 75% | 25% |
| பாதுகாப்புக் கட்டணங்கள் | 80% | 20% |

(4) உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் உற்பத்திக் கிரயத்தில் 15% இலாபம் வைத்து வியாபாரப் பிரிவுக்கு மாற்றப்படுகின்றன.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **செனேவி என்ஜினியரிங்** இன் உற்பத்திக் கிரயக் கூற்றை (உற்பத்திக் கணக்கு) **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 05

**ஆஷினி டிரேடர்ஸ்** என்பது **ஆஷினி** என்பவருக்குச் சொந்தமான ஒரு தனியுடமை வியாபாரம் ஆகும். 2024 மார்ச் 31 இலான அவருடைய வியாபாரத்தின் பரீட்சை மீதி இணங்கவில்லை. ரூபா 38,300/- வித்தியாசமானது தொங்கற் கணக்கிற்கு செலவுப்பதிவு செய்யப்பட்டு, வரைவு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன. **ஆஷினி டிரேடர்ஸ்** வியாபார வருமதிகள் மற்றும் வியாபார சென்மதிகளுக்காக கட்டுப்பாட்டுக் கணக்குகளைப் பேணுகிறது.

பின்னர், வித்தியாசத்திற்கான பின்வரும் காரணங்கள் அடையாளங் காணப்பட்டன :

(1) அலுவலகச் செலவினம் ரூபா 6,000/- ஆனது காசேட்டில் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(2) 2024 மார்ச் மாதத்திற்கான நீர்க் கட்டணம் ரூபா 3,500/- ஆனது நீர்ச் செலவினங்கள் கணக்கில் ரூபா 5,300/- ஆகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. எனினும், மற்றைய பதிவு சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(3) **ஆஷினி** தனது தனிப்பட்ட தேவைக்காக ரூபா 2,500/- காசினை எடுத்துள்ளார். இது காசேட்டில் மாத்திரமே பதிவு செய்யப்பட்டிருந்தது.

(4) 2024 மார்ச் 31 இல் கணினியொன்று ரூபா 250,000/- இற்கு கொள்வனவு செய்யப்பட்டமையானது அலுவலகப் பராமரிப்புக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்தது. இது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(5) 2024 மார்ச் மாதத்திற்காகச் செலுத்த வேண்டிய பாதுகாப்புக் கட்டணம் ரூபா 35,000/- ஆனது இரண்டு பேரேட்டுக் கணக்குகளிலும் இரு முறை பதிவு செய்யப்பட்டிருந்தது.

(6) விற்பனை நாட்குறிப்பேட்டின் மொத்தம் ரூபா 16,200/- இனால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(7) காசுக்குச் செய்யப்பட்ட விற்பனை ரூபா 45,000/- ஆனது விற்பனைக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை, ஆனால் அது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

பின்வருவனவற்றைத் **தயாரிக்குக :**

(a) மேற்படி வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகள் (07 புள்ளிகள்)

(b) தொங்கற் கணக்கு. (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 06

**பிரவீன் டிரேடர்ஸ்** என்பது **பிரவீன்** என்பவருக்குச் சொந்தமான ஒரு தனியுடமை வியாபாரம் ஆகும். 2024 மார்ச் 31 இலான **பிரவீன் டிரேடர்ஸின்** பரீட்சை மீதி கீழ்வருமாறு :

**பிரவீன் டிரேடர்ஸ்**

**2024 மார்ச் 31 இலான பரீட்சை மீதி** *(ரூ. '000)*

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் : | | |
| காணி மற்றும் கட்டடம் (காணிப் பெறுமதி – ரூபா 6,000,000/-) | 10,000 | |
| அலுவலக உபகரணம் | 9,600 | |
| மோட்டார் வாகனங்கள் | 3,000 | |
| 2023 ஏப்ரல் 01 இல் திரண்ட தேய்மானம் : | | |
| கட்டடம் | | 500 |
| அலுவலக உபகரணம் | | 4,400 |
| மோட்டார் வாகனங்கள் | | 750 |
| விற்பனைகள் | | 94,000 |
| கொள்வனவுகள் | 58,300 | |
| 2023 ஏப்ரல் 01 இல் தொக்கு | 5,500 | |
| கையிலுள்ள காசு | 120 | |
| வங்கி மேலதிகப்பற்று | | 1,500 |
| வியாபார வருமதிகள் | 6,400 | |
| வியாபார சென்மதிகள் | | 8,000 |
| சம்பளங்களும் கூலிகளும் | 15,700 | |
| அலுவலகச் செலவினங்கள் | 150 | |
| செலுத்திய அலுவலக வாடகை | 3,000 | |
| நீர்ச் செலவினங்கள் | 500 | |
| பாதுகாப்புக் கட்டணங்கள் | 1,100 | |
| வங்கி மேலதிகப்பற்று வட்டி | 450 | |
| மின்சாரச் செலவினங்கள் | 1,250 | |
| விற்பனைத் தரகு (பணிசை) | 1,300 | |
| வங்கிக் கடன் | | 1,000 |
| வங்கிக் கட்டணங்கள் | 150 | |
| 2023 ஏப்ரல் 01 இல் மூலதனக் கணக்கு | | 6,370 |
| **மொத்தம்** | **116,520** | **116,520** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) கிரயத்தில் மதிப்பிடப்பட்ட 2024 மார்ச் 31 இலான இறுதித் தொக்கு ரூபா 7,250,000/-.

(2) 2024 மார்ச் மாதத்திற்கான பின்வரும் செலவினங்கள் கணக்கேடுகளில் அட்டுறுவாகியிருக்கவில்லை:

| | | |
|---|---|---|
| மின்சாரம் | : | Rs.100,000/- |
| விற்பனைத் தரகு | : | Rs.150,000/- |

(3) செலுத்தப்பட்ட அலுவலக வாடகைக் கணக்கானது வாடகைக்குப் பெறப்பட்ட கட்டடத்திற்காக, அக்கட்டடத்தின் உரிமையாளருக்குச் செலுத்தப்பட்ட மீளளிக்கத்தக்க வைப்பு தொகையான ரூபா 600,000/- இனை உள்ளடக்கியுள்ளது.

(4) 15% வருடாந்த வட்டியில் 2024 மார்ச் 01 ஆந் திகதி ரூபா 1,000,000/- வங்கிக் கடனொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது. கடனுக்கான மீள் கொடுப்பனவுகள் 2024 ஏப்ரல் 01 இலிருந்து ஆரம்பிப்பதுடன் 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காகச் செலுத்த வேண்டிய வட்டி கணக்கேடுகளில் கணக்கிற் கொள்ளப்படவில்லை.

(5) வணிகத்தின் கொள்கையானது கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் கீழ்வருமாறு தேய்மானஞ் செய்வதாகும் :

| | | |
|---|---|---|
| கட்டடம் | : | ஆண்டிற்கு 05% |
| அலுவலக உபகரணம் | : | ஆண்டிற்கு 20% |
| மோட்டார் வாகனங்கள் | : | ஆண்டிற்கு 25% |

(6) வாடிக்கையாளர் ஒருவர் வங்குரோத்து அடைந்ததன் காரணமாக ரூபா 100,000/- தொகையை அறவிட முடியாக் கடனாகப் பதிவழிப்புச் செய்யவும் 2024 மார்ச் 31 இல் எஞ்சியுள்ள வியாபார வருமதிகள் மீதியில் 5% ஏற்பாட்டைச் செய்யவும் **பிரவீன்** தீர்மானித்தார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

கீழ்வருவனவற்றைத் தயாரிக்குக :

(a) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று. (11 புள்ளிகள்)

(b) 2024 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று. (09 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | வரைக (Draw) | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | கூறுக/ குறிப்பிடுக(State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | அடையாளங்காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | ஏற்பிசைவு செய்க (Recognize) | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret) | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile) | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | வரைக (Graph) | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | தயாரிக்குக (Prepare) | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | தொடர்பாடுக(Communicate) | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | சுருக்கமாகக குறிப்பிடுக(Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | பகுப்பாய்வு செய்க (Analyze) | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |